<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 276/2022

இன்று 2023 ம் ஆண்டு ஜுலை திங்கள் 6 ம் நாள் இன்று இந்த வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கே.ஆர்.கண்ணன்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : சுப்பிரமணியம்

தந்தை பெயர் : முத்துச்சாமி கவுண்டர்

வயது : 71

<u>முதல் விசாரணை</u>

வாதி ஆஜர். பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதி.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

3.9.1994– வாதி பெயரிலுள்ள கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1

23.3.2005 – வாதி பெயரிலுள்ள பொது அதிகார ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ 2

6.10.2006– பொது அதிகாரப் பத்திரத்தின் ரத்து பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.3

6.10.2006 வாதி பெயருக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகாரப் பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.4

28.6.2007– 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள கிரயப் பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.5

31.10.2007 – 2ம் பிரதிவாதி பெயரிலுள்ள கிரயப் பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.6

14.8.2021 வாதி பெயரிலுள்ள கணினி பட்டா வா.சா.ஆ.7

8.8.2022 வழக்குச் சொத்துக்கான வில்லங்கச் சான்றிதழ் வா.சா.ஆ.8

தாவாப்படி தீர்ப்பாக கேட்டுக் கொள்கிறேன்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-K.R.Kannan

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(பொறுப்பு)

திருப்பூர்.